# சென்னை மெட்ரோ இரயில் இணையதளம் உங்களை வரவேற்கின்றது

வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் சென்னை மாநகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் பெருகிக் கொண்டே வருகிறது. எனவே, இருப்புப்பாதை அடிப்படையிலான விரைவான போக்குவரத்து திட்டமொன்றின் தேவையினை உணர்ந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம், பேருந்துகள் உள்ளிட்ட தனியார் போக்குவரத்து கட்டமைப்பு, புறநகர் இரயில் சேவை மற்றும் துரித போக்குவரத்து இரயில் திட்டம் இவைகளுடன் இணைந்து, விரைவான, வசதியான, நம்பிக்கைக்கு உகந்த, செயல்திட்பமுடைய, அதிநவீன, சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டம் ஒன்றினை வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

## நிறுவனம் பற்றிய தகவல்

இந்த திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக **"சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்"** என்கிற சிறப்புவகை பொதுத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கி உள்ளது. இந்த நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 03.12.2007 அன்று பதிவு செய்யப்பட்டு, தற்போது கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் இயங்கி வருகின்றது.

எண். 11/6 சீதம்மாள் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018
தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி எண் - 91 44-24310174
நிகரி - 91 44-24312430
மின்னஞ்சல் முகவரி - chennaimetrorail@gmail.com

இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து கூட்டு முயற்சியில் (Joint Venture) செயல்படுத்திடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இயக்குநர் குழுமம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தில் கீழே குறிப்பிட்டுள்ளோர் இடம் பெற்றுள்ளனர்

| | | |
|---|---|---|
| 1) | முனைவர் எம். இராமச்சந்திரன், இ.ஆ.ப.,<br>இந்திய அரசு செயலாளர்,<br>நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம். | தலைவர் |
| 2) | முனைவர் டி.வி.சோமநாதன், இ.ஆ.ப.,<br>தமிழ் நாடு அரசு செயலாளர்,<br>சிறப்பு முயற்சிகள் துறை | நிர்வாக இயக்குநர் |
| 3) | திரு கே. ஞானதேசிகன், இ.ஆ.ப.,<br>தமிழ் நாடு அரசு முதன்மை செயலாளர்,<br>நிதித்துறை. | இயக்குநர் |
| 4) | திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப.,<br>தமிழ் நாடு அரசு முதன்மை செயலாளர்,<br>உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை | இயக்குநர் |
| 5) | திரு எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப.,<br>தமிழ் நாடு அரசு முதன்மை செயலாளர்,<br>மற்றும் போக்குவரத்து ஆணையர். | இயக்குநர் |
| 6) | திரு கே. அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப.,<br>தமிழ் நாடு அரசு முதன்மை செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. | இயக்குநர் |
| 7) | திருமதி விலாசினி இராமச்சந்திரன், இ.ஆ.ப.,<br>இந்திய அரசு கூடுதல் செயலாளர்,<br>செலவினத்துறை, நிதி அமைச்சகம். | இயக்குநர் |
| 8) | திரு எஸ்.கே.மாலிக், இ.ர.பொ.ப.,<br>கூடுதல் உறுப்பினர், (கட்டிடபொறியியல்)<br>இரயில்வே வாரியம். | இயக்குநர் |
| 9) | முனைவர் நூர் முகமது, இ.ஆ.ப.,<br>உறுப்பினர் செயலாளர்,<br>தேசிய தலைநகர் பகுதித் திட்ட வாரியம். | இயக்குநர் |
| 10) | திரு ஏ.கே. மேத்தா, இ.ஆ.ப.,<br>இந்திய அரசு இணைச் செயலாளர்,<br>நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம். | இயக்குநர் |

## திட்டத்தின் இலக்கு

தற்போது இயங்கிவரும் பேருந்துகள், புறநகர் இரயில் மற்றும் துரித இரயில் உள்ளிட்ட பல்வகைப் போக்குவரத்துக் கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து, சென்னை வாழ் மக்களுக்கு விரைவான, நம்பிக்கைக்கு உகந்த வசதியான, செயல்திட்பமுடைய, அதிநவீன சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டத்தை உறுதி செய்தல்.

## திட்டத்தின் அவசியம்

வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் சென்னை மாநகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் பெருகிக் கொண்டே வருகிறது. எனவே, இருப்புப்பாதை அடிப்படையிலான விரைவான போக்குவரத்து திட்டம் ஒன்றின் தேவையினை உணர்ந்து, சென்னை மொட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மாநகரப் போக்குவரத்துக் கழகம், பேருந்து உள்ளிட்ட தனியார் போக்குவரத்து, புறநகர் இரயில் சேவை மற்றும் துரித போக்குவரத்து இரயில் திட்டம் இவைகளுடன் இணைந்து, விரைவான, வசதியான, நம்பிக்கைக்கு உகந்த, செயல்திட்பமுடைய, அதிநவீன, சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்து திட்டம் ஒன்றினை வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

## திட்டத்தின் வடிவமைப்பு

இந்த திட்டம் தொடர்பாக ஒரு விரிவான திட்ட அறிக்கையினை டெல்லி மெட்ரோ இரயில் கழகம் தயாரித்துள்ளது. இந்த அமைப்பு மெட்ரோ இரயில் திட்டதை டெல்லியில் சிறப்பாக அமைத்து செம்மையாக செயல்படுத்தி வருகின்றது. இந்த விரிவான திட்ட அறிக்கையில் முத ற்கட்டமாகக் கீழே காணும் இரண்டு மெட்ரோ இரயில் வழித்தடங்களை அமைத்திடலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது:-

| மெட்ரோ இரயில் வழித்தடம் | தொலைவு | வழித்தட விவரங்கள் |
|---|---|---|
| <u>வழித்தடம் - 1</u><br>வண்ணாரப்பேட்டையிலிருந்து விமான நிலையம் வரை | 23.1 கி.மீ | வண்ணாரப் பேட்டை –பிராட்வே (பிரகாசம் சாலை) - சென்னை சென்ட்ரல்-ரிப்பன் மாளிகை - கூவம் கரை ஒரமாக – அரசினர் தோட்டம்-தாராப்பூர் கட்டிடம்– ஸ்பென்ஸர்ஸ்–ஜெமினி–அண்ணா சாலை–சைதாப்பேட்டை – கிண்டி– சென்னை விமான நிலையம். |
| <u>வழித்தடம் - 2</u><br>சென்னை சென்ட்ரலில் இருந்து பரங்கிமலை வரை | 22 கி.மீ | சென்னை சென்ட்ரல் – ஈ.வே.ரா பெரியார் சாலை வழியாக வேப்பேரி - கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி - அமைந்தக்கரை - ஷெனாய் நகர் - அண்ணாநகர் கிழக்கு - அண்ணாநகர் இரண்டாவது நிழற்சாலை - திருமங்கலம் - கோயம்பேடு பேருந்து நிலையம் - ஜவகர்லால் நேரு சாலை வழியாக - வடபழனி - அசோக்நகர் - சிட்கோ - ஆலந்தூர் - பரங்கிமலை. |
| மொத்தம் | 45.1 கி.மீ | |

இந்த இரு வழித்தடங்களின் விவரம் கீழே காணும் வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

முதல் வழித்தடத்தில், வண்ணாரப்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை வரை 14.3 கி.மீ தூரம் சுரங்கப்பாதையாகவும் மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் இருக்கும். இரண்டாவது வழித்தடத்தில் சென்னை சென்ட்ரலில் இருந்து அண்ணாநகர் இரண்டாவது நிழற்சாலை வரை 9.7 கி.மீ தூரம் சுரங்கப்பாதையாகவும் மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்ட பாதையாகவும் அமைக்கப்படவுள்ளன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு வழித்தடங்களிலுள்ள பாதைகள் மற்றும் நிலையங்கள் பற்றிய தகவல்கள் தற்காலிகமானவை. இவை விரிவாக வடிவமைத்து செயல்படுத்தப்படும்போது மாறுதல்களுக்கு உட்பட்டவையாகும்.


Chennai
LEGEND
Washermanpet
Mannadi
High Court
Chennai Central
Egmore
Nehru Park
Kilpauk Medical College
Pachaiyappa's College
Shenoy Nagar
Anna Nagar East
Anna Nagar Tower
Thirumangalam
Koyambedu
CMBT
Arumbakkam
Vadapalani
Ashok Nagar-KK Nagar
SIDCO
Alandur
St Thomas Mount (M)
Officer's Training Academy
Meenambakkam
Chennai Airport
Guindy
Little Mount
Saidapet
Chamiers Road
Teynampet
Gemini
Thousand Lights
LIC
Govt Estate
BAY
LEGEND
CORRIDOR-1.
Under Ground
Elevated
CORRIDOR-2
Under Ground
Elevated

# திட்டத்தின் நிலை

## திட்டம் நிறைவு பெறுதல்

முதல்கட்டப் பணிகள் 2014 - 2015 நிதியாண்டில் முடிவுறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

## மத்திய அரசின் ஒப்புதல்

தமிழ்நாடு அரசு 07.11.2007 அன்று இரண்டு மெட்ரோ இரயில் வழித்தடங்களுக்கும் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு 28.01.2009 அன்று சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## ஜப்பான் நாட்டு நிதி உதவிக்கான ஒப்பந்தம் கையெழுத்திடுதல்

இந்த திட்டத்திற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.14,600 கோடி (விலைவாசி உயர்வு, மத்திய அரசின் வரிகள் மற்றும் கட்டுமான காலங்களில் ஏற்படும் வட்டி உட்பட, ஆனால் மாநில அரசின் வரிகள் மற்றும் மாநில அரசின் காலி நிலங்களுக்கான விலை நீங்கலாக) என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான செலவில் 41% -னை மாநில, மத்திய அரசுகள் கூட்டாகப் பகிர்ந்துகொள்ளும். மீதி செலவுத் தொகை ஜப்பானின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பிடம் இருந்து (Japan International Cooperation Agency (JICA)) கடனாகப் பெறப்படும். ஜப்பானின் அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பு இந்த திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிட ஒப்புதல் அளித்து, அதற்கான ஒப்பந்தம் 21.11.2008 அன்று டோக்கியா நகரில் கையெழுத்தானது.

## பொது ஆலோசகர்கள் நியமனம்

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டப்பணிகளுக்கான "பொது ஆலோசகர்கள்" (General Consultants) 24.02.2009 அன்று தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஈஜிஸ் இரயில் (Egis Rail, France)

என்ற நிறுவனத்தின் தலைமையில் ஐந்து நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கூட்டமைப்பு, மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பொது ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டமைப்பின் பிற உறுப்பினர்கள் (அ) ஈஜிஸ் இந்தியா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், இந்தியா (Egis India Consulting Engineers Private Ltd, India) (ஆ) மான்செல் கன்சல்டன்ட்ஸ் ஏசியா லிமிடெட், ஹாங் காங் (Maunsell Consultants Asia Ltd, Hong Kong), (இ) பாலாஜி இரயில் ரோடு சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (Balaji Rail Road Systems Ltd, India) மற்றும் (ஈ) யாச்சியோ இன்ஜினியரிங் கோ லிமிடெட், ஜப்பான் (Yachio Engineering Co Ltd, Japan). சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான வடிவமைப்பு (Design), மேற்பார்வை (Supervision), தரக்கட்டுப்பாடு (Quality Control), பாதுகாப்பு (Safety) மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடு மேலாண்மை (Contract Management) ஆகியவற்றில் பொது ஆலோசகர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு உரிய ஆலோசனைகள் வழங்கி உதவுவார்கள்.

## முதன்மை ஆலோசகர் நியமனம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளுக்கான "முதன்மை ஆலோசகராக" (Prime Consultant) டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தை நியமித்துள்ளது. முதன்மை ஆலோசகர் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதில் ஆலோசனைகள் வழங்கி உதவி செய்வதோடு, பொது ஆலோசகர்களின் பணிகளையும் மேற்பார்வையிடுவர். மேலும், கட்டுமானப்பணிகள் நடைபெறும் காலங்களில் ஏற்படும் பல்வேறு விளைவுகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கோரும் தகவல்களைத் தந்து, ஆலோசனைகள் வழங்கி உதவுவார்கள்.

<u>வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள்</u>

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி எண் | நிறுவனத்தின் பெயர் | வழங்கப்பட்ட தேதி | ஒப்பந்தத்தின் மதிப்பு * ரூபாய் கோடியில் | விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ECV -01 | திருவாளர்கள் சோமா என்டர்பிரைஸ் லிமிடெட் | 13.2.2009 | 194.20 | கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை வடிவமைத்துக் கட்டுதல் |
| 2. | ECV-02 | திருவாளர்கள் லார்சன் & டுப்ரோ லிமிடெட் | 12.1.2010 | 141.13 | அசோக் நகரிலிருந்து பரங்கிமலை வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை (இப்பகுதியில் அமையவுள்ள இரயில் நிலையங்களில் உள்ள இரயில் பாதை உட்பட) வடிவமைத்துக் கட்டுதல். |
| 3. | ECV-03 | திருவாளர்கள் லார்சன் & டுப்ரோ லிமிடெட் | 25.1.2010 | 173.30 | சைதாப்பேட்டையிலிருந்து இராணுவ பயிற்சி மையம் (Officers Training Academy) வரை உயர்த்தப்பட்ட இரயில் பாதை (இப்பகுதியில் அமையவுள்ள இரயில் நிலையங்களில் உள்ள இரயில் பாதை உட்பட) வடிவமைத்துக் கட்டுதல். |

(* தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி தவிர மற்ற அனைத்து வரிகள் உட்பட)

***********